உ
சிவமயம்



யாழ்ப்பாணம் தென்மராட்சி உசன் மிருசுவிலை பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

திரு.வாரித்தம்பி சின்னத்துரை அவர்களின் ஆரா அன்புத் துணைவியான

# அமரர்.திருமதி.நவமணி சின்னத்துரை

அவர்களின் பூவுலகப்பிரிவு குறித்த

# பொன் அஞ்சலி நினைவு மலர்

19.04.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



அமரர்

# திருமதி நவமணி சின்னத்துரை

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

## 19.04.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

"அன்னையே தெய்வம் அவளே உலகம்
அன்னையில்லாமல் ஆவதொன்றில்லை'
எங்களனைவரதும் அன்புக்கும் பாசத்திற்குரிய
எங்கள் குடும்பக் குலவிளக்காய் ஒளிதந்து
எங்கள் அனைவரதும்நல் வாழ்க்கைக்கு
வழிகாட்டிய அருமை அம்மாவின்
பாத கமலங்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்

அன்பு நிறைந்த பேரொளியாக
ஆற்றல் மிகுந்த அன்னையாக
எந்நாளும் இனிய முகத்தினராக
எந்நேரமும் அனைவர்க்கும் உதவும்
பண்புத்தாயாக எங்கள் உள்ளங்களில்
உறைந்திருக்கும் அன்பு
அம்மாவின் பாதக்கமலங்களிற்கு
இவ்வினிய நினைவு மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

அன்புடன்
கணவர், மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும் உறவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த

அமரர்

# திருமதி. நவமணி சின்னத்துரை

அவர்கள்

மலர்வு
07 – 02 – 1940



உதிர்வு
20 – 03 – 2009

## திதி நிர்ணய வெண்பா

புகழுறு சர்வதாரி புனிதமாம் பங்குனியில்
திகழுறு தசமித்திதி தேய்பிறையில் – அகமினியாள்
எம்மன்னை நவமணியா ளிவ்வுலக வாழ்வகன்று
எம் பெருமான் தாளடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

திருவுங் கல்வியுஞ் சீரும் தளைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

எத்தாயார் எத்தந்தை எச்சுற்றத்தார்
    எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லைச்
    சிறுவிறகால் தீமூட்டிச் செல்லாநிற்பார்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
    திருவானைக் காவுடைய செல்வா என்றான்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
    அல்லல் கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே

## திருவாசகம்

அன்றே என்றார் ஆவியும் உடலும்
    உடமை எல்லாம்
குன்றே அணையாய் எனையாட் கொண்ட
    போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறெனக்குண்டா என்டோர்
    முக்கண் எம்மாளே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே
    இதற்கு நாயகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை அகத்தமர்ந் தினிய
பாலுமாய் அமுதாய் பன்னாக பரணன்
பனிமலர்த் திருவடி இணைமேல்
அலயம் பாகின் அனை சொற் கருவூர்
அமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடும் அடியவர் எல்லாம்
சிவபதம் குறுகிநின்றாரே

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயண னொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்புவேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் – உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்அடியின்கீழ் இருக்க என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்தவூரும் பெண்டிரும மிளமையும் வளமேவும்
விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளக்கு தீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருத்திலேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்குலாவும் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே

**வழிபடு தெய்வங்களின் திருவடி தொழுதேற்றி.............
அமரர் திருமதி நவமணி சின்னத்துரை அவர்களிற்கு
நற்கதி அருளுமாறு அவர் வழிபட்டு
வந்த தெய்வங்களின் மீது பாடிய பராவல் பாக்கள்.**

## அருள்மிகு கஜகேணிப்பிள்ளையார்



வெள்ளை எருதேறும் விரிசடையான் பெற்றெடுத்த
கற்பகமே கருணைக்கடலே கஜகணியில் வாழ்பவனே
சித்திவிநாயகனே எம்மண்பு நவமணி அம்மா
நித்தமும் உன்நினைவில் வாழ்ந்தார்க்கு முத்தியீவாய்

## அருள்மிகு மெய்யாங்கேணிப் பிள்ளையார்

மெய்மை மனத்தடியார்க்கு வேண்டும் வரமளிக்கும்
மெய்யாங்கேணி வாழும் மேலான விநாயகனே
உய்யவருள் வேண்டி உன்பாதம் வந்தடைந்த
மெய்யடியாள் எம்மன்னைக்கு அபயமளித் துதவுவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு உசன் கந்தக்கடவுள்

சீர்மலிந்து சிறப்புமிகும் உசனென்னும் ஊரில்
திருவிளங்கும் பூந்தோட்டமுன் கோவில் கொண்டு
பேர்மலிந்த ஊர்மக்கள் பெரிதும் போற்றும்
பிறவிநோய் பிரிவதற்கு வழியைக் காட்டும்
கார்குழலி உமைமைந்த கந்தா காப்பாய்
காலனவன் கவர்ந்த எம்மன்னை நவமணி
பார்புகழ் வாழ்வொழித்து உன்பாதம் வந்தாள்
பாதுகாத்து அமைதிபெற அருளை யீவாய்.

## அருள்மிகு உசன் வீரபத்திரர்

தேன்சொரியும் மலர்கொண்டு திருவடிகள் துதிசெய்தாள்
திருமகளாம் எம்மன்னை நவமணி தீபமானாள்
வானுலகில் வாழும் வீரபத்திர தேவா
வரமளித்து சாந்திபெற வழிசெய்வாய் தேவா.

## அருள்மிகு புதுக்குளத்து அம்மன்

கண்ணகையே கருணைத்தாயே புதுக்குளத் துறைபவளே
எண்ணமெல்லாம் உன்நினைவில் வாழ்ந்த எம்மன்னை
மண்ணக வாழ்வகன்று உன்னருளைப் பெறவென்று
விண்ணகம் வந்தவர்க்கு விரும்பிநீ உதவுவாயே.

## அருள்மிகு நாச்சிமார்

புகழ்பூத்தமெய்யாங்கேணி விநாயகர் அருகிலிருந்து
அகம்மகிழ அனைவர்க்கும் அருள் அளிக்கும்
நாச்சிமாரே! நாளுமுனை வணங்கிய நவமணி
ஆச்சியுன்னருகு வந்தாள் அபயமளித் தருளுவாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராவியற்கைப் பெருவாழ்வு எய்திய திருமதி நவமணி சின்னத்துரை அவர்களின் வாழ்க்கை வரலாறு

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்வகை நிலங்களிலே மருதநிலம் தனிச்சிறப்புடையதாகும். இவ்வின்பம் மலிந்த யாழ்ப்பாணத்தின் தென்பகுதியாகும் தென்மராட்சியில் கொடிகாமத்தை அண்டிய மிருசுவிலோடு இணைந்த உசன் என்னும் அழகிய கிராமம் ஒன்று உண்டு.

தித்திக்கும் முக்கனிகள் தரும் மா,பலா, வாழை, மற்றும் பனை வளமும் தாழுண்ட நீரைத் தலையாலே தான் தருகின்ற தென்னை மரங்களும் செழித்திலங்கும் திருவாரூர் இது. திருவருள் மிகுந்த கந்தப் பெருமான் வீற்றிருக்கும் உசன் கந்தசுவாமி கோயிலும் மற்றும் கஜகணிப்பிள்ளையார் வீரபத்திரர் ஆகிய திருக்கோயில்களும் கொண்ட சிறப்பான ஊர் உசன் பகுதியாகும்.

தமிழ் மொழியையும் சைவசமய விழுமியங்களையும் பேணி வளர்த்த நல்லதிபர்களும் நல்லாசிரியர்களும் இன்னும் தொழில்சார் நிபுணர்களும் வாழ்ந்த வாழுகின்ற புண்ணிய பூமி எமது ஊர்.

மேற்படி சிறப்புப் பெற்ற இவ்வூரில் இன்றைக்கு பல வருடங்களுக்கு முன் வாழ்ந்த சைவவேளாண் குல திலகராகிய திரு.வினாசித்தம்பிக்கும் அவரது அன்பு மனைவியார் சின்னம்மாவுக்கும் மகளாக 07.02.1940 இல் பிறந்தவரே இந்த நினைவு மலருக்குரியவரான அமரர் திருமதி நவமணி சின்னத்துரை ஆவர். இவரது உடன் பிறப்புக்களாகப் பிறந்தவர்கள் செல்லம்மாவும் காமாட்சியுமாவர்.

அழகும் ஆரோக்கியமும் கொண்ட குழந்தையாகிய நவமணி பெற்றாரின் அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைப்பாலும் நல்ல பராமரிப்பாலும் வளர்ந்து பள்ளி செல்லும் வயதை அடைந்தார். உரிய காலத்தில் பெற்றார் இவருக்கு வித்தியாரம்பம் செய்துவித்து அருகிலுள்ள யா/உசன் இராமநாதன் வித்தியாலயத்தில் கல்வி பெறவைத்தனர். காலப்போக்கில் பாடசாலைக்கல்வியை நிறைவு செய்த பின்னர் ஒரு குடும்பப்பெண்ணுக்குரிய அறிவாற்றல்களை வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொண்டார்.

திருமண வயதை அடைந்ததும் இவரது ஊரிலேயே பேரும் புகழுமாக வாழ்ந்த திரு.திருமதி வாரித்தம்பி செல்லம்மா தம்பதிகளின் மகன் திரு சின்னத்துரை என்பவரை இவர்முறைப்படி திருமணம் செய்தார். புதுமணத்தம்பதிகள் பெற்றார் பெரியவர்கள் ஆகியோரின் நல்லாசிகளைப் பெற்று குலதெய்வங்களையும் வழிபட்டனர்.

மனமொத்த தம்பதிகளான இவர்களின் இல்லற வாழ்வின் இனிய நற்பயனாக தலை மகனாக கேதீஸ்வரன், மற்றும் யோகேஸ்வரன், பவானி, முனீஸ்வரன், கருணாகரன், கோமதி, திருகரன் ஆகிய அன்பு மக்கள் பிறந்தனர். இவரும் இவரது கணவராகிய சின்னத்துரையும் பிள்ளைகளைப் பேணி வளர்த்து கல்வி பெறச் செய்து இளைய மகனான திருகரன் தவிர்ந்த மற்றப்பிள்ளைகளனைவரதும் திருமணங்களைக் கண்டு களித்து எல்லாப்பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்த பெருமைக்குரியவராக அமரர் நவமணி திகழ்ந்தார்.

கடந்த பல வருடங்களாக சுகயீனமா இருந்து இடையில் சுகமாவதும் பின்னர் சுகயீனமாவதுமாக இருந்து வந்த இவர் கடந்த மாதம் 20.03.2009 வெள்ளிக்கிழமை பின்னிரவு தசமித்திதியில் இவ்வுலகைவிட்டு இறையுலகு ஏகினார். இவரது ஆத்மா சாந்தியடைய எல்லோரும் இறைவனை வேண்டுவோம்.

"உறங்குவது போலும் சாக்காடும் உறங்கி
விழிப்பதுவு போலும் பிறப்பு" - திருவள்ளுவர்

"யாவும் எப்பவோ முடிந்த காரியம்"
யோகர்சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படரும் கொடிகளான பிள்ளைகள் விபரம்

### மூத்தமகன் கேதீஸ்வரன்

இவர் ஏழாலையைச் சேர்ந்த திரு.திருமதி.கந்தசாமி தம்பதிகளின் மகள் சிவச்செல்வி என்பவரைத் திருமணம் செய்து துவாரகா, மிதுரா ஆகிய இரு பிள்ளைகளுடன் கனடாவில் வசதியாக வசிக்கின்றார். அங்கு பிள்ளைகளிருவரும் ஆங்கில மொழியில் கல்வி கற்கிறார்கள்.

### 2வது மகன் யோகேஸ்வரன்

இவர் வடக்கு மிருசுவிலைச் சேர்ந்த திரு.திருமதி பொன்னையா தம்பதிகளின் மகள் செல்வராணி என்பவரைத் திருமணம் செய்து துசானி, யதூபிகா, தாருகா ஆகியபிள்ளைகளைப் பெற்றனர். மூத்த பிள்ளைகளிருவரும் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்க்கின்றனர். இவர் தனது சொந்த ஊரிலே வசதியாக வாழ்ந்துவருகின்றார்.

### மூத்தமகள் பவானி

இவர் கச்சாய் தெற்கு திரு.திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் மகன் திரு.அருணாசலம் (கொடிகாமம் அருண் புவைவயகம் உரிமையாளர்) என்பவரைத் திருமணம் செய்து அனோசன், அர்ச்சயன் இருவரும் யா/சாவகச்சேரி இந்து தேசிய பாடசாலை மாணவர்கள். மற்றும் அகல்சன், ஜெனிசன் யா/வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவர்கள். ஆகிய பிள்ளைகளுடன் தனது தாயாரின் வீட்டில் கணவருடன் வசதியாக வசிக்கின்றார்.

### 3வது மகன் முனீஸ்வரன்

இவர் நீர்வேலியைச் சேர்ந்த திரு.திருமதி.கோணேசலிங்கம் தம்பதிகளின் மகள் நிர்மலாம்பிகை என்பவரைத் திருமணம் செய்து பிரணவன், பிரவீனா ஆகிய பிள்ளைகளுடன் சுவீசில் வசிக்கின்றார். பிள்ளைகளிருவரும் அங்கு கல்வி கற்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4வது மகன் கருணாகரன்

இவர் விடத்தற்பளையைச் சேர்ந்த திரு.திருமதி.குணரத்தினம் தம்பதிகளின் மகள் கேமலதா என்பவரைத் திருமணம் செய்து ஜனனி, சங்கவி ஆகிய பிள்ளைகளுடன் கனடாவில் வசிக்கின்றார். பிள்ளைகள் இருவரும் கனடாவில் கல்வி கற்கின்றார்கள்.

## 2வது மகள் கோமதி

இவர் உசனைச் சேர்ந்த திரு.திருமதி.அரியரத்தினம் தம்பதிகளின் மகன் பார்த்தீபன் அவர்களைக் கந்தர்வ திருமணம் செய்து கணவர் பிள்ளைகளுடன் கனடாவில் வசிக்கின்றார். பிள்ளைகளான டிதேனுகா, பிருந்தாபன் இருவரும் ஆங்கில மொழியில் கல்வி கற்கின்றனர்.

## 5வது மகன் திருகரன்

இவரும் கனடாவில் தொழில் செய்து கொண்டு கனடாவில் உள்ள தனது உடன் பிறப்புக்களுடன் வசிக்கின்றார்.

**எங்களனைவரதும் அன்புக்குரிய அமரர் திருமதி நவமணி சின்னத்துரை அவர்களின் பூவுலகப் பிரிவு குறித்த**

## கண்ணீர் அஞ்சலிக் கவிதைப்பூக்கள்

இல்லறமாம் நல்லறத்தில் என்இனிய துணைவியாக
நல்லபல மக்களை நாம்பெற்று வளர்த்தோமே
அன்னவரின் வாழ்வுக்காய் அரும்பணிகளாற்றிச் சென்றாய்
உன் பிரிவால் உளம்சோர்ந்தேன் இறையுலகில் சாந்திகொள்வாய்

அன்னைமுன் னறிந்ததெய்வம் அவள்தனி உலமமென்றே
உன்நிழல் தன்னைநம்பி உலகினில் வாழ்ந்தோமின்று
நின்னது பிரிவுகண்டு நெஞ்சினில் ஏக்கமுற்றோம்
என்னதான் செய்வோமிங்கு எமக்கினி யாரேயம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையுடன் எமைப்பேணி அன்பு காட்டி
ஆதரித்து நோய்நொடிகள் ஆகா வண்ணம்
பெருமை பெறவைத்த பெருநிதியே அம்மாவே!
அருளளிக்கும் இறைதான் சேர்க்கவென இறைஞ்சுகின்றோம்.

ஆசைமிகு அன்புமாமி எமதுள்ளத் தாரமுதே
பாசம்மிக வைத்தீர் பண்பதனைக்காட்டி
நாமற நாமுயர நாம்பெற்ற நல்நிதியே
ஏமாற வைத்துவிட்டு எங்குநீர் சென்றீரோ!

மறந்துமொரு தீங்கெண்ணா உங்கள் மனதைக்கண்டு
மனதார மகிழ்ந்திரு தோம்மாமி எம்மைவிட்டுப்
பிரிந்ததுன்ப வேதனையால் பெருந்துயர் நாமுற்றோம்
பிரியமுள்ள மாமியே உனையினி காண்பதெங்கே!

அன்புடனே அரவணைத்து அமுதும் ஊட்டி
அரியபல கதைகள் சொல்லி அறிவும் ஊட்டி
இன்பமுடன் தாலாட்டுப் பாடல்களும் பாடி
இனிமையுடன் எமைவளர்த்த அம்மம்மாவே! அப்பம்மாவே!!

துன்பமுறும் குழந்தைக ளெம்துயரம் தீர்க்க
தூயவரே மீண்டொரு காலெம்முன் தோன்றாயே
என்றென்றும் உமைமாறவோம் எங்கள் நெஞ்சினி
ஏற்றமுடன் துதிசெய்வோம் இறைதாளில் அமைதிகொள்வாய்.

பெற்றமக்கள் போலிங்கு பெறாமக்கள் எங்களையும்
நற்தாயைப் போலிங்கு அன்புமொழியால் அரவணைத்து
பற்றினொரு நாளும்பார்த்தீர் உம்மைப் போலிற்கு
பெற்றெடுக்கா மக்களைப் பேணுவார் யாருளரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

இறப்பெல்லாம் உடலுக்கே என்றும் ஆன்மா
இறவாது எரியாது இதுவே உண்மை
பறந்துவிடும் ஆவியுடல் பாரில் வீழும்
படைப்பின் நியதியது பதறுவதால் பயனே இல்லை
கறந்தபால் என்றைக்கும் முலையில் ஏறாது
காலனவன் கவர்ந்த உயிர் மீண்டுவரா
அறவழியில் வாழ்ந்த நவமணியாள் அண்ணல் பாதம்
அமர்ந்திடவே அஞ்சலித்து அமைதிகொள்வோம்.

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்ட
பேரினை நீக்கிப் பிண மென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

## பட்டினத்தார் பாடல்

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீரும் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின் தாள் சதங்கச்சி ஏகம்பனே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறவாப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்க.**
**'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு' நேற்று இருந்தவன்**
**இன்றில்லை என்ற பெருமையுடையது இந்த உலகம்.**

திருவள்ளுவரின் இக்கூற்றுக்காலம் காலமாக நிலையாமையைப்பற்றி எமக்கு அறிவுறுத்துகின்றது.
எனினும் எவ்வளவுதான் உண்மை மாறாதிருக்கின்ற போதும் எமக்கு வேண்டியவர்களின் திடீர் இறப்பு என்பது துயரத்துக்குள் நம்மை ஆழ்த்தி விடுவதும் உலக இயற்கையாகவே இருக்கிறது. பற்றுத் தொடரும் வரை துன்பமும் நிகழவே செய்யும்.

உசன் கந்தசுவாமி கோயிலைச்சேர்ந்த மெய்யடியார்களில் திரு.திருமதி.சின்னத்துரை நவமணி குடும்பத்தினரை மறக்கமுடியாது இவர்களின் சமயப்பற்றும் மனிதநேயப்பண்புகளும் என்னைக் கவர்ந்ததால் இவர்கள் மீது தனியானதொரு மரியாதை எனக்கு உண்டு கடந்த மாதம் மேற்படி குடும்பத்தலைவி திருமதி.நவமணி காலமானதும் அந்தத்துயரில் பங்குகொண்டு குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினேன்.

மேற்படி நவமணி அம்மா தெய்வ பக்தியுடையவராக இருந்து சொல்லாலும் செயலாலும் தூயவாழ்க்கை வாழ்ந்தவர். தமது கணவருடன் சேர்ந்து மக்கள் அனைவரையும் நல்வாழ்வு வாழ வழிகாட்டி மற்றும் பலருக்கும் உதவிகள் செய்து வாழ்ந்ததொரு மதிப்பிற்குரிய தாயாவர். அவரின் ஆத்மா சாந்தியடையவும் குடும்பத்தினர் ஆறுதல் அடையவும் எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டி வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புடன்
இரத்தினசபாபதிஐயா கேதீஸ்வரக்குருக்கள்
உசன் கந்தசுவாமி கோவில பிரதம அர்ச்சகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாடக் கிரியைகளில் சில

## 1. விநாயக குரு வழிபாடு

உலகங்கள் யாவற்றிக்கும் முதற்காரணமாகிய பொருள் பிரணவம் எனப்படும் அதற்கு தலமாயிருக்கும் சிவசக்திக்கு விநாயகர் என்று பெயர் (வி - இல்லாத, நாயகர் - தலைவர் அதாவது தமக்கு தலைவர் இல்லாதவர், மேலான தலைவர் எனப் பொருள்படும்) எனவே முதற் செய்யப்படும் கிரியை விநாயகர் வணக்கம். கிரியை இனிது நடத்த முடிவுற முதல்வனை வணங்குதல் இதுவாகும். குரு சமய கிரியைகளுக்கெல்லாம் தலைவராதலும் அவரிலே சிவபெருமானுடைய திருவருள் சிறந்து நிற்றலாலும் குருவை வழிபடுவர். (கு - மலம்,ரு - நீக்குபவர்) சந்தணம், மஞ்சள் அல்லது கோமயம் (பசுச்சாணம்) இவற்றில் ஒன்றில் பிள்ளையாரை உருவாக்கி அறுகம்புல் மேலே சாத்தி வணங்குவது.

## 2.பவித்திரமணிதல்

பவித்திரமாவது மோதிரம் போலத் தருப்பையினால் செய்யப்படடு மோதிர விரலில் அணியப்படுவது இதன் நோக்கம் கிரியை செய்யும் போது மனம் வாக்கு காயங்களால் வரத்தக்க பாவங்களினின்றும் காத்தல் (பவித்திரம் - பதனாத் த்ராயதே பாவத்திலே விழுதலின்றும் காப்பதும் - காமிகம்)

## 3.சங்கற்பம்

சங்கற்பமாவது செய்யப்போகும் கிரியையிலே மனத்தைப் பதித்து அதிலே நிறுத்துவது பதித்து அதிலே, நிறுத்துவது . இன்ன நோக்கமாக இது செய்யப்போகிறேன். என்பது சங்கற்ப வாக்கியத்தின் சுருக்கமான கருத்து . நிகழும் சிருஷ்டித் தொடக்கத்திலிருந்து இன்று வரையும் உள்ள காலம் இதில் குறிக்கப்படுவதனாலே காலத்தின் பெருமையும் தற்கால வாழ்வின் சிறுமையும் ஆன்ம ஈடேற்றத்தின் மகிமையும் உணரத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சங்கற்ப முறை

வலது கையில் தருப்பை, பூ ,அரிசி, அல்லது எள்ளு முதலியவற்றை வைத்துக்கொண்டு வலதுகை மேலாகவும், இடதுகையை கீழாகவும் வைத்து இடது பெருவிரலை வலது பெருவிரலால் அமர்த்தி வலது முழந்தாளில் வைக்க வேண்டும்.

## 5.கும்பம்

கடவுளைக் கும்பத்தில் வழிபடும்போது கும்பம் உடம்பின் பாவனையாகக் கருதப்படுகிறது. வாழை இலையை அதன் தலைப்பகுதி வடக்கு அல்லது கிழக்கு பக்கமாக வைத்து நெல் அல்லது பச்சை அரிசி இட்டு தண்ணீர் நிறைந்த குடம் வைத்து ஐந்து அல்லது, ஏழு அல்லது, ஒன்பது மாவிலையின் மேல் கும்பத்தை ஓர் பட்டால் போர்த்தலாம். தேங்காய் தலையாகவும் மாவிலைகள் தலைமயிராகவும் குடம் தசையாகவும் நூல்கள் நாடிகளாகவும் பட்டு தோலாகவும் தண்ணீர் இரத்தமாகவும் கருதப்படுகின்றது. கும்பத்தினுள் இரத்தினம் போடப்பட்டால் அது எலும்பாகவும் பாவனை செய்யப்படும்.

## 6.மாவிலை

இது முக்கியமாக மங்களப் பொருளாகவும் தோரணமாகவும் கட்டப்படுகின்றது. ஆலயங்கள் மற்றும் விழாக்கள் இல்லங்களில் திருமண விழாக்களிலும் இம் மங்களப் பொருள் பயன்படுத்தப்படும். மாவிலை தோரணம் அமைக்கும் போது மூன்று முறைகளாக பயன்படுத்தப்படும்.

**a. நற்காரியங்கள்** ஆலயங்களில் நடைபெறும் உற்சவ காலங்களிலும் திருமண மண்டபம் சுபகாரியங்களில் மாவிலைத் தோரணம் காம்பு நுனியை முன்புறமாக வளைத்து முன் பகுதியில் காம்பைக்குற்றி தொங்க விடுதல் வேண்டும். மாவிலை தலைகுனிந்து வரவேற்கும் பாணியில் அமைதல் வேண்டும். இது சுபகாரியத்திற்குரிய அறிகுறியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

b.கும்பம் வைக்கும் போது தேங்காயின் கீழ் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது இலைகள் வைத்து அமைத்தல் சிறப்பாகும்.

c.அபரக்கிரியை காலங்கள் - இது வீட்டில் மரணச்சடங்கு நிகழும் போது அமைக்கப்பட வேண்டிய முறை மாவிலையின் காம்பு நுனியை பின்பக்கமாக மடித்து குத்தி தொங்க விடல் முறையாகும். இது இம்முறைக்கு மட்டும்.

## 7) வாழைமரம்

இது ஆலயங்கயிலும் விழாக்களிலும் வீடுகளில் திருமண வைபவங்களிலும் மற்றும் சுப காரியங்களிலும் கட்டுதல் இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்கு பெரும் பயனைத்தரவல்லது. .தன் இலையில் உணவருந்துதல் இதன் காய் தண்டு, கனி உணவாகவும் நார் பூக்கட்டுவதற்கும் பயன்படுகின்றது. இதன் பயன் எப்படியோ அதுபோல எல்லோரிடம் இப்படியான பயனை பெறக்ககூடிய நிலைவரவேண்டும். இதனை அழிக்கமுடியாது. வாழையடி வாழையாக வாழ வேண்டும் என்பதினை எடுத்துக்காட்டும் முகமாக இது கட்டப்டுகின்றது. மக்கள் பழம் மங்களகரமான நிகழ்வுக்கும் காய் துக்கமான நிகழ்வுக்கு கட்டப்படுகிறது. வாழை இலையில் கும்பம் வைக்கும் போது தலை நுனிப்பாகம் கிழக்கு அல்லது வடக்குப்பக்கம் இருத்தல் வேண்டும். சாப்பிடும் போது தலை நுனிப்பக்கம் இடது கைப்பக்கம் இருத்தல் வேண்டும். அபரக்கிரியைகளுக்கு தலை நுனி தெற்குப் பக்கம் இருத்தல் வேண்டும்.

## 8.தென்னந் தோரணம்

தென்னங் குருத்து தோரணத்தின் நுனி கீழ்ப்பக்கமாக இருக்கும்படி சுபகாரியங்களுக்கும் மேற்பக்கமாக அபரக் கிரிகைளுக்கும் அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபரக்கிரியைகளும் அதன் விளக்கமும் நன்மைகளும்.

1. ஒருவர் இறந்த பின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதலானோரால் செய்யப்பட்டும் கிரியை இறந்தவர் பாவங்களில் நின்று நீங்கி சிவத்துவம் அடையும் பொருட்டு செய்தல். தாய் தந்தையரை பேணாது கடவுளை வழிபட்டாலும் பயன் இல்லை என்பது கௌசிகர் வரலாற்று மூலம் அறியலாம். இல்லறத்திற்கு உரிய ஐவகை கடமைகளில் பிதிர்க்கடன் முக்கியமானது என வள்ளுவரும் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்தோர் பெரும் பேறுகளும் சித்திகளும் அருளும் பெறுவர். பிதிர்க்கடன் செய்யாதோர் சமயஆசாரம் தவறியவர் ஆவர். பிதிரார் வருந்தினர் தீமைகள் நேரும். அபரக்கிரியைகள், தகனக்கிரியை, அத்தியஞ்சயனம், அந்தியேட்டி ஏகோதிட்டம் சபீண்டீகரணம், மாசியம், சிரார்த்தம் எனவும் அழைக்கப்படும். தீட்சை பெற்றோரே சைவர் தீட்சை பெற்றோருக்கு கிரியைகள் செய்யலாம் மற்றோருக்கு பூதவுடலுக்கு தீட்சை வைத்தபின்பே கிரியைகள் நடைபெறும்.

### 2. கோதாணம்

ஓர் இலட்சணமான பசுமாட்டிக்கு கோபூசை செய்து வழிபட்ட பின்பு அந்த கோமாதாவின் வாலை கார்த்தாவின்(உயிர் பிரிய இருப்பவர்) வலது கரத்தில் வைத்து நீர் வார்த்து குருவுக்கு தானமாக கொடுத்தல். அவர் சுய நினைவு இழந்த நிலையில் அவரது பிள்ளைகள் அதனைச் செய்யலாம்.

### 3. அந்திய கருமம்

தரையை கோமயத்தினால் மெழுகி தர்பையின் மேல் தெற்கே தலைவைத்து வடக்கே பார்க்க மகன் மடிமேலே வைத்து பால் பருக்கி மூல மந்திரத்தைவலது காதில் ஓதுதல் வேண்டுதல். சுற்றத்தார் திருமுறை ஓதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சங்கற்ப மந்திரம்

இன்ன வருட அயன மாதபட்ச நட்சத்திர வார தினத்தில் என்னுடைய மாதா பிதாவுக்கு பூதவுலை சுத்தி செய்வதாகவும் சிவாக்கினியை மூட்டுவதற்காகவும் இக்கிரியை செய்கின்றேன் என்பதாகும்.

## 5. பேரீடதானம் (மேளம்)

பேரீடதானம் என்பது பேரிகை(மேளம்) அடித்தல் சுவர்க்கம், பூவுலகம் பாதாளம் ஆகிய மூன்று இடங்களில் உள்ளவர்களின் நன்மை கருதி எல்லா வகையான கொடியோர் அசுரர், பிசாசுகள் பறந்தோடும் பொருட்டு பேரீடதானம் செய்யப்படும்.

## 6. உடற்சுத்தி

சிவாச்சாரியார் பந்தலின் நடுவே சிவகும்பம் உருத்திர கும்பம் வைத்து அவற்றின் ஓமக்கிரியை வளர்த்து சிவனையும் உருத்திரனையும் வழிபடுவர். எண்ணெய், பஞ்சகாவியம் இளநீர், மஞ்சள் நீர் சிவகும்பநீர் ஆகியவற்றால் நீராட்டிச் சுத்தம் செய்து புத்தாடை புனைந்து நீறு சாத்தி பூச்சூடி பிரணவாசனமாக தர்ப்பையில் வைப்பவர்.

## 7. ஆன்ம சுத்தி

சிவாச்சாரியார் பஞ்ச சுத்திகளையும் சகனீகரணத்தையும் செய்து அக்கினி வளர்த்து அட்டதிக்கு தேவர்களையும் சிவனையும் வழிபட்டு அவர்களின் ஆசிர்வாதத்தைப் பெற்று கும்பத்தில் இருத்த சிவனை உடலின் மேல் எழுந்தருளும் படி வழிபாடு செய்வார். இதயத்தில் ஆசனபூசை செய்து கொள்வர்.ஆசாரியர் அறந்தவரின் ஆன்மாவை தன் இதயத்தில் கொண்டுவந்து உருத்திரனை தியானித்து பூராணாகுதியுடன் உருத்திரமூர்த்தியை அடையும் வழியில் விடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. சுண்ணம் இடித்தல்

உரலை பூமிதேவியாகவும் உலக்கை மாமேரு மலையாகவும் பூசித்து உரலில் மஞ்சள் பொடி அறுகு எண்ணெய் முதலியன இட்டு திருமுறை திருவாசகம் ஓதி பூதவுடலை சுத்தம் செய்வதற்கு இடிக்கப்படும். பாவங்கள் நீக்கி திருவருள் உண்டாவதற்காக பந்தம் ஏற்படும்

## 9. வாய்க்கரிசி போடுதல்.

சுற்றத்தவர் எழுந்து இடப்புறமாக சுற்றிவந்து காசும் அரிசியும் சேர்த்து பூதவுடலின் வாயினுள் இட்டு இறுதிக்கடமையைச் செய்தல்.

## 10. மயானம் செல்லுதல்

கார்த்தா குடத்தை முன் கொண்டு செல்ல ஓமாக்கினியில் இருந்து உருத்திரனை ஆவாசித்த சிவாக்கினியையும் கொண்டு செல்லல் வேண்டும். செல்லும் பொது அட்டதிக்கு தேவர்களின்ஆசி வேண்டி நெற்பொரி தூவப்படும். (இது சைவ ஆசாரமுள்ள ஒருவரே செய்யத்தக்கவர்). விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதாத்தானம் எனப்படும். விறகினைச்சுற்றி வந்து சிரசு தெற்காக இருக்க இறக்கிய பின்பு கால் இறக்குதல் வேண்டும்.

## 11. தீயிடல்

கும்பத்துடன் சிவாக்கினியுடன் உடலைச்சுற்றி வந்து கும்ப நீரை உடலுக்கு தெளித்து குடத்தை நிலத்தில் போட்டு சிவாக்கினியை விறகின் மேல் இட்டு எரியச் செய்வர்.

## 12.காடாற்றுதல்

சுடுகாட்டில் நாம் மூட்டிய அக்கினி முற்றாக எரிந்ததும் நீர் ஊற்றி காட்டை ஆற்றி நவதானியம் விதைத்தல். அவ்விடத்தை ஆக்கிரமித்துள்ள பூதபைகாசங்கள் திருப்திப்படுத்தும் பொருட்டு பழம், றொட்டி, இளநீர் முதலிய பொருட்கள் பலியாக இடப்படும். நாம் தீயிட்டு தகித்தமைக்குரிய தோசத்திங்கு இது சாத்தியமாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. எட்டாம் நாட் கிரியை**

பிரபூதபலி என்ற கிரியைக்கு சமன் உண்பன, தின்பன பருகுவன பண்டங்கள் என்பவற்றைப் படைத்து கற்பூரம் கொழுத்தி அதன் ஒரு பகுதியை பேயும் பிசாசும் ரட்சதரும் அனுபவிக்குமாறு சந்தியில் கொண்டு சென்று சந்தியில் கழித்தது விடும் முறை.

**14.அந்தியேட்டி**

கடைசியான யாகம் ஆன்ம சாந்திக்காக செய்த சமய அனுட்டானத்தில் நேர்ந்த குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஓர் புனித நீர்க்கரையில் செய்யும் கிரியை.

**15நக்கினதானம்**

இறந்தவரின் பசி தாகம் ஆடையில்லாக் குறையை நீக்கி சாந்தி அளிப்பதாக ஆசாரியருக்கு கொடுக்கும் தானம்

**16. இடபதானம்**

எருதிற்கு சிறப்புச் செய்து அதனை பூசித்து இறந்தவர் சார்பில் இருக்கும் தர்ம பலனை எருது மூலம் சிவனிடம் ஒப்படைத்தல்.

**17.ஏகோதிட்டம்**

இக்கிரியையயில் இருக்கும் புரோகிதரை ஆன்மாவாக நினைத்து அவருக்கு வேண்டிய சகல பொருட்களையும் ஒரு வருடத்திற்குரிய புரோகிதருக்கு தானமாகக் கொடுத்தல். அப் பொருட்கள் உணவுப் பொருட்கள் ஆடை திருநீற்றுப்பை குடை மிதிவடி செபமாலை முதலியன.

**18சபீண்டீகரணம்**

மாவைக்குழைத்து (பிண்ணடம்) உருண்டை மூலம் இறந்தவரை பிதிர் தேவர்களுடன் சேர்க்கும் கிரியை பிதிர் தேவர் இவற்றைப் பெற்று இறந்தவருக்கு இறந்த முன்னோருக்கும் வழங்குவர்.

**19.மாசியங்கள்**

மாதா மாதம் இறந்தவர் திதியில் செய்யப்படும் சிராா்த்தம் மாசியம் எனப்படும்.

**ஆப்திக சிரார்த்தம்**

முதலாவது வருட முடிவில் நடைபெறும் கிரியை இதற்கு தானமோ பிண்டமோ தேவையில்லை. இது அபரக்கிரியையயின் பூர்த்தி எனப்படும்.

**வருடாந்த சிரார்த்தம்**

சிரார்த்த கிரியை தொடர்பு இடையுறாது இருக்கவும் வருடா வருடம் நடைபெறும் கிரியை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்து நினைவில் நிறுத்துகின்றோம்.

எங்கள் உள்ளத்தில் என்றும் நீங்காத இடம் பிடித்த அன்பு அம்மா எங்கள் குடும்ப விளக்கு அமரர் திருமதி நவமணி சின்னத்துரை அவர்களின் பூவுலகப் பிரிவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஓடி வந்து ஆறுதல் அளித்தோருக்கும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோர் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்டோருக்கும் எமது நன்றிகள்.

மேலும் இவரது இறுதிக்கிரியைகளை நடத்திய குருமார்கள் இதற்கு உதவியோர் இறுதியாத்திரையில் கலந்துகொண்டோர், சுடுகாட்டலுவல்கள் அனைத்திற்கும் உதவியோர்க்கும் இனிய நன்றிகள் இவரது அந்தியேட்டிக்கிரியைகள் இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகயை நடாத்திய அந்தணருக்கும் இவற்றுக்கு உதவிய அனைவருக்கும் இன்றைய ஆத்மசாந்தி வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் மற்றும் இவ்வினிய மலரினை தொகுத்து ஆக்கிய ஓய்வுபெற்ற அதிபரும் ஆசிரியருமான திரு.சுக.நவரத்தினம் அவர்கட்க்கும் இம் மலரினை அச்சிட்டு உதவிய கொடிகாமம் சிவகஜன் அச்சகத்திற்க்கும் எமது இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்து நினைவில் நிறுத்துகின்றோம்.

உசன்,
மிருசுவில்.
19.04.2009.




அன்புடன்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




* அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

Sivaranjanam
102

சிவகஜன் பதிப்பகம், கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org